# பத்திரிக்கை செய்தி

## பட்டா பெயர் மாற்றம் செய்து தர ரூ.2,500/- லஞ்சம் கேட்டு வாங்கிய கிராம நிர்வாக அலுவலர் மற்றும் தனி நபர் கைது

புகார்தாரர் திருமதி.மஞ்சு, எண்.42, பாவடி சந்து, விஜபி நகர், பெருங்குடி தாலுகா, ஈரோடு மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரர் கடந்த 27.01.2025ம் ஆண்டு புங்கம்பாடி கிராமத்தில் 1200 சதுர அடி கொண்ட நிலத்தினை பத்திர பதிவு செய்திருந்தார், இந்த இடத்திற்கான பட்டா பெயர் மாற்றம் அன்றைய தேதியே ஆன்லைன் மூலமாக விண்ணப்பிக்கப்பட்டது. பட்டா பெயர் மாற்றத்திற்காக கள ஆய்விற்கு வந்த திருமதி.ஜெயசுதா, கிராம நிர்வாக அதிகாரி, புங்கம்பாடி கிராமம், ஈரோடு மாவட்டம் மற்றும் திரு.பூபதி, கருங்கல்பாளையம், ஈரோடு மாவட்டம் (தனி நபர்) ஆகியோர் பட்டா பெயர் மாற்றம் செய்துதர தங்களுக்கு ரூ.3,500/- லஞ்சமாக தர வேண்டும் என வற்புறுத்தியுள்ளனர். பின் லஞ்ச பணத்தினை ரூ.2,500/- ஆக குறைத்துக் கொண்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை ஈரோடு மாவட்ட பிரிவில் அளித்த புகாரின் பேரில் இன்று 06.02.2025, பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திருமதி.ஜெயசுதா, கிராம நிர்வாக அதிகாரி உத்தரவின்படி திரு.பூபதி, தனிநபர் லஞ்ச பணம் ரூ.2,500/-யை புகார்தாரரிடமிருந்து பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் இருவரும் கைது செய்யப்பட்டனர்.